## 12th History Lesson 5 Questions in Tamil

## 5] ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்களில் புரட்சிகர தேசியவாதத்தின் காலம்

1) பொதுவுடைமைக் கட்சி குறித்த கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) இந்திய தேசிய காங்கிரசில் இடதுசாரிகளின் செல்வாக்கும் படிப்படியாகச் சுதந்திரப்போராட்டத்தில் அது ஏற்படுத்திய தாக்கமும் 1940 களின் பிற்பகுதியில் கணிசமான அளவில் உணரப்பட்டது.

ii ) இந்தியப் பொதுவுடைமைக் (கம்யூனிஸ்ட்) கட்சியானது எம்.என். ராய், அபானி முகர்ஜி, எம்.பி.டி. ஆச்சார்யா, முகமது அலி, முகமது ஷாஃபிக் ஆகியோரால் உஸ்பெகிஸ்தானிலுள்ள தாஷ்கண்டில் உருவாக்கப்பட்டது.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

2) பொதுவுடைமைக் (கம்யூனிஸ்ட்) கட்சியானது சோவியத் யூனியனில் எப்போது உருவாக்கப்பட்டது?

A) 1920, அக்டோபர்

B) 1920, நவம்பர்

C) 1921 ஜூன்

D) 1921, டிசம்பர்

3) முதல் புரட்சிகர தேசியவாதக் குழுவினர் பெஷாவருக்கு எப்போது வந்தனர்?

A) 1920, ஜூன் 3

B) 1920, நவம்பர்

C) 1920, ஜூலை 2

D) 1921, ஜூன் 3

4) எந்த இரு ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பொதுவுடைமைவாதிகள் மீது தொடர்ச்சியாக சதி வழக்குகள் தொடுக்கப்பட்டன?

A) 1923 – 1927

B) 1922 – 1925

C) 1922 – 1932

D) 1922 – 1927

5) பொதுவுடைமைவாதிகள் மீது தொடுக்கப்பட்ட முதல் வழக்கு எது?

A) பெஷாவர் சதி வழக்கு

B) மீரட் சதி வழக்கு

C) கான்பூர் சதி வழக்கு

D) போல்ஷ்விக் சதி வழக்கு

6) இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இந்திய மண்ணில் முறைப்படி எங்கு தொடங்கப்பட்டது?

A) டெல்லி

B) கல்கத்தா

C) சென்னை

D) பம்பாய்

7) கூற்று: சணல், பருத்தி ஆடைத் தொழிற்சாலைகளிலும் நாடெங்கிலுமுள்ள ரயில்வே நிறுவனங்களிலும் பல்வேறு நகராட்சிப் பணியாளர்கள் மத்தியிலும் தொழிற்சங்கங்கள் உருவெடுத்தன.

காரணம்: கம்யூனிஸ்ட் கொள்கைகள் பரவுவதைக் காலனிய ஆட்சியாளர்களால் மிகச் சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியவில்லை.

A) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

B) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

C) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

D) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

8) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) போல்ஷ்விசம் என்று அழைக்கப்பட்ட அரசியல் புரட்சிகர தேசியவாதத்தை நசுக்கும் பொருட்டு பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் ஒடுக்குமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

ii ) 1924ஆம் ஆண்டின் கான்பூர் சதிவழக்கு அத்தகையதொரு நடவடிக்கையே ஆகும்.

iii ) வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் பெரும்பாலோனோர் தமிழகத்தை சேர்ந்தவர்கள்

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

9) கான்பூர் சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் இந்திய தண்டனைச்சட்டத்தின் எப்பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டனர்?

A) 121 ஏ

B) 124 ஏ

C) 124 பி

D) 121 பி

10) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) கான்பூர் சதிவழக்கு மாட்சிமை பொருந்திய அமர்வு நீதிபதி ஹோம்ஸ் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

ii ) இவர் மிட்னாபூர் அமர்வு நீதிபதியாகப் பணியாற்றியவர்.

iii ) சௌரிசௌரா வழக்கில் தொடர்பு கொண்டவர்களாகக் குற்றம் சாட்டப்பட்ட 172 விவசாயிகளுக்கு மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்துப் பிரசித்தி பெற்றவர்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

11) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) கான்பூர் சதிவழக்கில் முசாபர் அகமது, சவுகத் உஸ்மானி, நளினி குப்தா, எஸ். ஏ. டாங்கே ஆகியோர் நான்கு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை அனுபவிப்பதற்காகச் சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

ii ) இந்த விசாரணையும் சிறைத் தண்டனையும் இந்தியாவில் கம்யூனிஸ்ட்களின் நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை ஓரளவுக்கு ஊட்டியது.

iii ) கம்யூனிஸ்ட்களை கண்காணிக்க குழு ஒன்று ஆங்கில அரசால் உருவாக்கப்பட்டது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

12) கீழ்க்கண்டவற்றுள் தவறான கூற்று எது?

i ) இந்தியாவின் மாநில மொழிப் பத்திரிகைகள் நீதிமன்ற நடவடிக்கைகளை மிக விரிவான முறையில் வெளியிட்டன.

ii ) சதி வழக்கின் விசாரணையும் சில தலைவர்கள் கைது செய்யப்பட்டதும் புரட்சிகர தேசியவாதத்தின் உணர்வை மழுங்கடித்தது.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

13) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) டிசம்பர் 1925இல் இந்தியாவெங்கிலும் இருந்து வந்திருந்த பல்வேறு கம்யூனிஸ்ட்களின் குழுக்களின் மாநாடு ஒன்று நடந்தேறியது.

ii ) மாநாட்டில் தமிழ்நாட்டிலிருந்து சிங்காரவேலர் சென்று கலந்துகொண்டார்.

iii ) கல்கத்தாவைத் தலைமையிடமாகக் கொண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முறைப்படி நிறுவப்பட்டது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

14) கான்பூர் சதிவழக்கில் எத்தனை பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டது?

A) 13

B) 8

C) 4

D) 15

15) கான்பூர் சதி வழக்கு குறித்த கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) 8 பேர் மீதே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

ii ) ஆர். எல். சர்மா, எம். என். ராய் ஆகியோர் முறையே ஜெர்மனியிலும் பாண்டிச்சேரியிலும் இருந்ததால் நேரில் வரவழைக்காமல் குற்றப்பத்திரிகைகள் அனுப்பிவைக்கப்பட்டன.

iii ) சிங்காரவேலர் மோசமான உடல்நிலை காரணமாகப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

iv ) கடைசியாக, அந்தப் பட்டியலில் ஐவர் மட்டுமே எஞ்சியிருந்தனர்.

A) i ), ii ), iii ), iv )

B) i ), iii )

C) ii ), iii )

D) ii ), iii ), iv )

16) சிங்காரவேலர் தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) எம். சிங்காரவேலர் (18 பிப்ரவரி 1860 – 11 பிப்ரவரி 1946) மதராசில் பிறந்தார்.

ii ) இளமைக் காலத்தில் கிறித்தவ மதத்தைத் தழுவியவர்.

iii ) பிற கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவர்கள் பலரைப் போன்று இவரும் ஆரம்பத்தில் இந்திய தேசிய காங்கிரசில் இணைந்து செயல்பட்டவர்.

iv ) சில காலத்திற்குப் பிறகு அவர் புரட்சிகர தேசியவாதப் பாதையைத் தேர்ந்தெடுத்தார்.

A) i ), ii ), iii ), iv )

B) i ), iii ), iv )

C) ii ), iii )

D) ii ), iii ), iv )

17) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) இரட்டைமலை சீனுவாசனுடன் இணைந்து தென்னிந்தியாவில் பல தொழிற்சங்கங்களை சிங்கார வேலர் தோற்றுவித்தார்.

ii ) 1923ஆம் ஆண்டு மே மாதம் முதல் நாள் முதன்முறையாக நாட்டில் மே தினத்தைக் கொண்டாடினார்.

iii ) 1928ஆம் ஆண்டு தென்னிந்திய ரயில்வே வேலைநிறுத்தத்தை (பொன்மலை, திருச்சிராப்பள்ளி) ஏற்பாடு செய்ததில் இவர் முக்கியப் பங்கு வகித்தார்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

18) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) மீரட் சதி வழக்கு ஆங்கிலேய அரசினால் தொடுக்கப்பட்ட அனைத்துக் கம்யூனிஸ்ட் சதி வழக்குகளிலும் பெரிதும் புகழ்பெற்றதாகும்.

ii ) 1930களின் பிற்பகுதி ஏராளமான தொழிலாளர் எழுச்சிகளைக் கண்டது.

iii ) நிலையின்மைக் காலம் மாபெரும் பொருளாதார மந்தநிலையின் சகாப்தம் (1929 – 1939) வரை நீண்டது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

19) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) தொழிற்சங்க நடவடிக்கைகள் பற்பல நகர்ப்புறங்களுக்குப் பரவி, தொழிலாளர் வேலைநிறுத்தங்களை ஏற்படுத்தியது.

ii ) இந்தக் காலக்கட்டம் முழுவதிலும் உழைப்பாளி வர்க்கத்தை ஒருங்கிணைப்பதில் காங்கிரஸ் தலைவர்கள் முக்கியப் பாத்திரத்தை வகித்தனர்.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

20) கீழ்க்கண்டவற்றுள் தவறான இணையைத் தேர்ந்தெடு.

A) 1927 – காரக்பூர் ரயில்வே பணிமனை வேலைநிறுத்தங்கள்

B) 1928 – லில்லுவா ரயில் பணிமனை வேலைநிறுத்தம்

C) 1929 – சணல் ஆலைகளில் நடைபெற்ற பல்வேறு வேலைநிறுத்தங்கள்

D) 1926 – பம்பாயில் நடந்தேறிய ஜவுளித் தொழிலாளர் வேலைநிறுத்தம்

21) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) 1928 ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டம் இயற்றப்பட்டது.

ii ) 1929 ஆம் ஆண்டு பொதுமக்கள் பாதுகாப்பு மசோதா இயற்றப்பட்டது.

iii ) இவ்விரு சட்டங்களும் குறிப்பாக தொழிற்சங்க நடவடிக்கைகளை அடக்குவதற்கும் உரிய அதிகாரங்களை அரசுக்கு அளிப்பதாக விளங்கியது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

22) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) தொழிலாளர்கள், விவசாயிகள் மத்தியில் வலுவான கம்யூனிஸ்ட் செல்வாக்கு நிலவுவது கண்டு அரசு கவலை கொண்டது.

ii ) புரட்சிகர தேசியவாத இயக்கத்தை துடைத்தெறியத் தீர்மானித்த அரசு பல்வேறு ஒடுக்குமுறை நடவடிக்கைகளில் இறங்கியது.

iii ) பிரிட்டிஷ் இந்தியாவின் பகுதிகளிருந்து கம்யூனிஸ்ட் கட்சியின் 32 முன்னோடிச் செயல்பாட்டாளர்களைக் கைது செய்தது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

23) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) ஆங்கில அரசால் கைது செய்யப்பட்டவர்களுள் அனைவரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள்.

ii ) 8 பேர் இந்திய தேசிய காங்கிரசைச் சேர்ந்தவர்கள்.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

24) இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டியமைக்க உதவுவதற்கென பிரிட்டானிய கம்யூனிஸ்ட் கட்சியால் அனுப்பிவைக்கப்பட்டவர்கள் யாவர்?

i ) பிலிப் ஸ்ப்ராட்

ii ) பான் ப்ராட்லி

iii ) லெஸ்டர் ஹட்சின்சன்

iv ) வேலண்டைன் சிரோலி

A) i ), ii ), iii ), iv )

B) i ), ii ), iii )

C) ii ), iii )

D) ii ), iii ), iv )

25) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) ஆங்கில அரசால் கைது செய்யப்பட்ட 32 தலைவர்களும் கொண்டுவரப்பட்டுச் சிலோன் சிறையில் அடைக்கப்பட்டனர்.

ii ) காலனிய நிர்வாகத்தினரால் 'நிலைகுலைவிக்கும் விஷயங்கள்' (subversive materials) என்று ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டுக் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான சாட்சியங்களாக ஒப்படைக்கப்பட்டன.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

26) மீரட் சதி வழக்கு விசாரணை குறித்த பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) விசாரணையை கோரக்பூரில் நடத்துவதென்று பிரிட்டானிய அரசு தீர்மானித்தது.

ii ) எனவே அவர்கள் நடுவர் விசாரணை என்ற சலுகையைப் பெற முடிந்தது.

iii ) நடுவர் விசாரணை குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு அனுதாபத்தை உருவாக்கக் கூடும் என்று ஆங்கிலேயர் அஞ்சினர்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

27) மீரட் சதி வழக்கின் முக்கியத்துவம் குறித்த பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக ஒரு தேசிய மீரட் சிறைவாசிகளின் பாதுகாப்புக் குழு ஒன்று உருவாக்கப்பட்டது.

ii ) கே.எஃப். நாரிமன், எம்.சி. சக்லா போன்ற புகழ்பெற்ற வழக்கறிஞர்கள் குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் நீதிமன்றத்தில் வாதாடினர்.

iii ) காந்தியடிகள், ஜவகர்லால் நேரு போன்ற தேசியத் தலைவர்கள்கூடச் சிறைக்குச் சென்று குற்றம் சாட்டப்பட்டவர்களைப் பார்த்துவிட்டு வந்தனர்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

28) மீரட் சதி வழக்கின் தண்டனை குறித்த பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) 1929இல் நடைபெற்ற கைது நடவடிக்கைகளுக்கு 5 ஆண்டுகளுக்குப் பின்னர் 1934 ஜனவரி 16இல் மீரட் அமர்வு நீதிமன்றம் கடுமையான தீர்ப்பை வழங்கியது.

ii ) 27 பேர் தண்டிக்கப்பட்டு வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

29) மீரட் சதி வழக்கு தீர்ப்பு குறித்த பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) விசாரணையின்போது, கம்யூனிஸ்டுகள் அரசியல் சித்தாந்தங்களை உருவாக்கியதன் மூலம் தங்கள் தரப்பைத் தங்களுக்கான பிரச்சார மேடையாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

ii ) அவை செய்தித்தாள்களில் வெளியிட அனுமதிக்கப்படவில்லை.

iii ) தீர்ப்புக்கு எதிராகக் கிளர்ச்சிகள் வெடித்தன.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

30) மீரட் சதி வழக்கு குறித்த பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) பிரான்சு நாட்டினர் மூவர் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டதைத் தொடர்ந்து இந்த வழக்கு சர்வதேச அளவிலும் தெரியவந்தது.

ii ) மிகவும் முக்கியமாக ரோமன் ரோலண்ட், ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் போன்றவர்களும் கூடக் குற்றம் சாட்டவர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தனர்.

iii ) தேசிய, சர்வதேச அழுத்தங்களின் காரணமாக, அவர்களின் கோரிக்கையைத் தொடர்ந்து ஜூலை 1933இல் தண்டனை வெகுவாகக் குறைக்கப்பட்டது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

31) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) தேசியவாதத்தின் ஓர் ஒப்பற்ற நிலையைப் பகத்சிங் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்.

ii ) அவருடைய புரட்சிகர தேசியவாத நிலைப்பாடு, ஒரு தனித்த வழி என்ற அளவில் ஒட்டுமொத்த விடுதலை இயக்கத்தின் லட்சியங்களுக்காகப் பெரிதும் பாராட்டப்படுகிறது.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

32) பகத்சிங்கின் பின்புலம் தொடர்பான பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) கிஷன்சிங் (தகப்பனார்), வித்யாவதி கவுர் (தாயார்) ஆகியோரின் மகன் பகத்சிங் ஆவார்.

ii ) தற்போதைய பாகிஸ்தானின் ஒரு பகுதியான பஞ்சாப் மாநிலத்திலுள்ள லயல்பூர் மாவட்டம், ஜார்ன்வாலா என்ற இடத்தில் 1907 செப்டம்பர் 28இல் பிறந்தார்.

iii ) அவருடைய தகப்பனார் ஒரு பொதுவுடைமைவாதியாக இருந்தார்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

33) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) பகத்சிங்கின் குடும்பத்தினர் சுதந்திரப் போராட்டக்காரர்களாக விளங்கினர்.

ii ) பகத்சிங்கின் 13 ஆம் வயதில் ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்ந்தது.

iii ) தனது இளமைக் காலம் முதலாகவே, நவ்ஜவான் பாரத் சபா, ஹிந்துஸ்தான் ரிபப்ளிகன் அசோசியேஷன் ஆகிய அமைப்புகளில் தன்னை இணைத்துக்கொண்டார்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

D) i ), iii )

34) பின்வருபவர்களுள் ஹிந்துஸ்தான் ரிபப்ளிகன் அசோசியேஷனை தோற்றுவித்தவர்கள் யாவர்?

i ) சச்சின் சன்யால்

ii ) ஜோகேஷ் சட்டர்ஜி

iii ) சந்திரசேகர ஆசாத்

A) i ), ii ), iii )

B) i ), ii )

D) i ), iii )

35) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) 1918 இல் ரஷ்யாவில் நடந்தேறிய அக்டோபர் புரட்சியும் சோசலிசச் சித்தாந்தங்களும் புரட்சியாளர்களிடையே பெரும் செல்வாக்கைச் செலுத்தியது.

ii ) சந்திரசேகர ஆசாத், சிவராம் ராஜகுரு, சுகதேவ் தாபர் ஆகியோருடன் ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷனின் தலைவர்களில் ஒருவராக பகத்சிங் விளங்கினார்.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

36) "யதார்த்தமான அணுகுமுறையே நமது ஒழுங்குமுறை ஆனது. தீவிரமான தேவை ஏற்படும் பட்சத்தில் மட்டுமே வன்முறையைக் கையாள்வது நியாயப்படுத்தக் கூடியதாக இருக்கும்." என்று கூறியவர் யார்?

A) சுபாஷ் சந்திர போஸ்

B) திலகர்

C) பகத்சிங்

D) அரவிந்த கோஷ்

37) "நான் ஏன் நாத்திகனாக இருக்கிறேன்?" என்னும் நூல் யாருடையது?

A) கல்பனா தத்

B) ஹர்தயாள்

C) பகத்சிங்

D) பெரியார்

38) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) பகத்சிங் 1929 ஏப்ரல் 8இல் மத்திய சட்டமன்றத்தில் குண்டு வீசினார்.

ii ) அந்தக் குண்டுகள் எவரையும் கொல்லவில்லை.

iii ) ரௌலட் சட்ட மசோதாவை அறிமுகப்படுத்தும் நாளை அவர்கள் இதற்கெனத் தேர்ந்தெடுத்திருந்தனர்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) i ) மற்றும் ii )

D) i ), iii )

39) லாகூர் சதி வழக்கு குறித்த பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) ராஜகுரு, சுகதேவ், ஜதீந்திரநாத் தாஸ் ஆகியோருடன் பகத்சிங்கும் மேலும் 21 பேரும் கைது செய்யப்பட்டனர் .

ii ) ஹோம்ஸ் கொலை தொடர்பான விசாரணைக்கு அவர்கள் ஆளாக்கப்பட்டனர்.

iii ) இந்த வழக்கு இரண்டாவது லாகூர் சதி வழக்கு என்று அறியப்படுகிறது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

D) i ), iii )

40) பகத்சிங்குக்கு எப்போது மரண தண்டனை விதிக்கப்பட்டது?

A) 1930 செப்டம்பர் 7

B) 1929 அக்டோபர் 7

C) 1930 அக்டோபர் 7

D) 1930 நவம்பர் 7

41) "எங்களைத் தூக்கிலிடுவதற்குப் பதிலாகச் சுட்டுக் கொல்லுங்கள்" என்று எந்த மாநில ஆளுனருக்கு பகத்சிங் கடிதம் ஒன்றை அனுப்பினார்?

A) மும்பை

B) லாகூர்

C) சென்னை

D) பஞ்சாப்

42) "புரட்சி என்பது வெறும் குண்டு எறிதலோ கைத்துப்பாக்கியால் சுடுவதோ அல்ல. புரட்சி என்பது மனிதகுலத்தின் பிரிக்க முடியாத உரிமை" என்று கூறியவர் யார்?

A) சுபாஷ் சந்திர போஸ்

B) கல்பனாதத்

C) பகத்சிங்

D) லாலா ஹர்தயாள்

43) நீதிமன்றத்தில் பகத்சிங் மற்றும் அவரது நண்பர்கள் தங்கள் தரப்பு அறிக்கையை விடுத்த பின்பு எவ்வாறு முழக்கமிட்டனர்?

A) புரட்சி ஓங்குக

B) வாழ்க பாரதம்

C) ஏகாதிபத்தியம் ஒழிக

D) சுதந்திரம் எமது பிறப்புரிமை

44) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) லாகூர் சிறைச்சாலையில் 1931 மார்ச் 23 அன்று அதிகாலையில் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர்.

ii ) தங்கள் இறுதிமூச்சு அடங்கும்வரை ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக 'ஏகாதிபத்தியம் ஒழிக ' என்று முழங்கியவாறு அவர்கள் தூக்குமரக் கொட்டடியை எதிர்கொண்டனர்.

iii ) தேசியத்தின் புரட்சிகரமான அணியினரான இந்தப் புரட்சியாளர்களின் ஆகச் சிறந்த தியாகம் இல்லாமல் விடுதலைப்போராட்டத்தின் வரலாறு முழுமை அடையாது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

D) i ), iii )

45) ஹிந்துஸ்தான் ரிபப்ளிகன் அசோசியேஷன் தொடர்பான பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

winmeen.com

i ) ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷன் என்பது ஹிந்துஸ்தான் ரிபப்ளிகன் அசோசியேஷனின் புதுப்பிக்கப்பட்ட ஓர் அத்தியாயமே ஆகும்.

ii ) முதலாளித்துவ, ஏகாதிபத்திய அரசைத் தூக்கி எறிந்து புரட்சி ஒன்றின் மூலமாக ஒரு சோசலிசச் சமூகத்தை நிலைநாட்டுவதே அதன் குறிக்கோளாகும்.

iii ) ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷன் லாகூரில் ஹோம்சினைக் கொன்றது போன்ற பல நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

D) i ), iii )

46) லஜபதி ராய் மீது கொடுந்தாக்குதல் நடத்தியதற்கும் அதனைத் தொடர்ந்த ராயின் மரணத்திற்கும் பொறுப்பான காவல்துறைக் கண்காணிப்பாளர் யார்?

A) எஸ். தார்னே

B) லிட்டில் வுட்

C) சாண்டர்ஸ்

D) ஜேம்ஸ் ஏ. ஸ்காட்

47) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) 1929, டிசம்பரில் லிட்டன் பிரபு பயணம் செய்துகொண்டிருந்த ரயிலைக் கொளுத்தும் முயற்சியிலும் அவர்கள் ஈடுபட்டனர்.

ii ) 1930ஆம் ஆண்டில் பஞ்சாபிலும் உத்தரப்பிரதேசத்திலும் இதுபோன்ற எண்ணற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

48) பின்வருவனவற்றுள் கல்பனா தத் வாழ்ந்த காலத்தைத் தேர்ந்தெடு?

A) 1913 – 1995

B) 1915 – 1970

C) 1913 – 1985

D) 1912 – 1995

49) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) பிரிட்டிஷ் இந்தியாவில் பல புரட்சிக் குழுக்கள் இருந்தன.

ii ) சமூக அமைப்பில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்குடன் கூட்டான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பதாக இந்த அமைப்புகளின் தன்மை படிப்படியாக மாறியது.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

50) "உன்னத நோக்கத்திற்கான நமது தியாகம் வீண் போகாது", என்று ஆனந்த குப்தாவிடம் கூறியவர் யார்?

A) பகத்சிங்

B) லாலா ஹர்தயாள்

C) சூரிய சென்

D) கல்பனா தத்

51) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) 1930களின் நடுப்பகுதியில் யுகந்தர், அனுஷிலன் சமிதி போன்ற புரட்சிகரக் குழுக்கள் தேக்கமடைந்துவிட, அவற்றிலிருந்து புதிய குழுக்கள் தோன்றின.

ii ) வங்காளத்தில் பள்ளிக்கூடம் ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிந்த சூரியா சென்னின் தலைமையில் செயல்பட்ட குழு முக்கியமானதாகும்.

iii ) சூரியா சென் ஒத்துழையாமை இயக்கத்தில் தீவிரமாகப் பங்கெடுத்ததுடன், கதரையும் அணிந்துவந்தவர்.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

52) தனது சுயசரிதையில் சாவித்ரி என்பவரைப்பற்றி குறிப்பிடுபவர் யார்?

A) சுபாஷ் சந்திர போஸ்

B) கல்பனாதத்

C) பகத்சிங்

D) லாலா ஹர்தயாள்

53) சிட்டகாங் படைத்தளம் எப்போது தாக்கித் தகர்க்கப்பட்டது?

A) 1931 ஏப்ரல் 20

B) 1928 ஏப்ரல் 15

C) 1929 ஏப்ரல் 17

D) 1930 ஏப்ரல் 18

54) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) மாகாணத்தின் பிற பகுதிகளிலிருந்து தனிமைப்படுத்தும் முகமாக ரயில்வே உட்பட அனைத்துத் தகவல்தொடர்பு வலைப்பின்னல்களையும் துண்டித்தனர்.

ii ) தந்தி, அலுவலகங்கள், படைத்தளங்கள், காவல்துறை முகாம்கள் ஆகியவற்றின் மீது அது போன்ற தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன.

iii ) காலனிய நிர்வாகத்திற்கு நேரடியாகச் சவால் விடுக்கும் நோக்குடன் அது நடந்தேறியது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

55) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) புரட்சியாளர்கள் தேசியக்கொடியை ஏற்றி 'வந்தே மாதரம்', 'புரட்சி ஓங்குக' போன்ற கோஷங்களை முழங்கிக் குறிப்புணர்த்தினர்.

ii) தாக்குதல்களும் எதிர்ப்பும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்தன.

iii) பெரிதும் அவர்கள் நகரங்களிலிருந்து செயல்பட்டனர்.

iv) நகரத்தினர் அவர்களுக்கு உணவும் உறைவிடமும் அளித்தனர்.

A) i), ii), iii)

B) i), ii)

C) ii), iii)

D) ii), iii), iv)

56) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i) சூரியா சென்னைக் கைது செய்ய 4 ஆண்டுகள் பிடித்தன.

ii) சூரியா சென் பிப்ரவரி 1933 இல் கைதானார்.

iii) பதினொரு மாதங்கள் கழித்து 1934 ஜனவரி 12இல் அவருக்குத் தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டது.

A) i), ii), iii)

B) i), ii)

C) ii), iii)

D) i), iii)

57) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i) சமூகத்தில் தாய்நாட்டைக் காப்பதற்காய் இளம்பெண்களின் பிரதிநிதியாய் விடுதலைப்போரில் ஆயுதந்தாங்கி கல்பனா தத் போன்றோரும் பங்கேற்றனர்.

ii) போரின் நேரடி நடவடிக்கைகளில் பங்கு பெறாமல் செய்திகளை அங்குமிங்கும் எடுத்துச்செல்பவராய் போராடினார்.

A) i) மட்டும்

B) ii) மட்டும்

C) i) மற்றும் ii)

D) இரண்டும் தவறு

58) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i) புரட்சிகர சிட்டகாங் இயக்கத்தில் தீவிரமாகப் பங்கேற்றதினால் கல்பனா தத் கைது செய்யப்பட்டார்.

ii) தண்டனையாக சூர்யா சென்னும் கல்பனா தத்தும் வாழ்நாள் முழுதும் நாடுகடத்தப்பட்டனர்.

iii) சுமத்தப்பட்டக் குற்றச்சாட்டு யாதெனில் "பேரரசருக்கு எதிரான போரை நடத்தியது."

A) i), ii), iii)

B) i), ii)

C) ii), iii)

D) i), iii)

59) Chittagong Armoury Raiders' Reminiscences என்னும் நூலினை எழுதியவர் யார்?

A) பகத்சிங்

B) லாலா ஹர்தயாள்

C) சூரிய சென்

D) கல்பனா தத்

60) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i) இந்திய தேசிய காங்கிரசின் கராச்சி அமர்வு வன்முறையற்ற போராட்டங்களுக்கு மக்களை அணிதிரட்டியது.

ii) காந்தியடிகளின் தலைமையின் கீழ் காங்கிரஸ் நெசவாளர்களின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளித்தது.

A) i) மட்டும்

B) ii) மட்டும்

C) i) மற்றும் ii)

D) இரண்டும் தவறு

61) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i) உலக அளவிலான பொருளாதார பெருமந்தநிலையால் விவசாயம் பெருமளவில் பாதிக்கப்பட்டு விவசாயிகளும் சொல்லொணாத் துயரத்தில் இருந்ததால் காங்கிரஸ் விவசாயிகளை அணிதிரட்டியது.

ii) தனது ஒத்துழையாமை இயக்கத்தின் ஒரு பகுதியாக காங்கிரஸ் குத்தகை செலுத்தா மற்றும் வரிசெலுத்தாப் போராட்டத்தைக் கடைபிடித்தது.

iii) பெருமந்த அழுத்தத்தினால் ஏற்பட்ட சமூக – பொருளாதாரத் தேவைகள் கராச்சியின் காங்கிரஸ் அமர்வில் தீவிரமாய் பேசப்பட்டது.

A) i), ii), iii)

B) i), ii)

C) ii), iii)

D) i), iii)

62) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i) விவசாயிகள் கிசான் சபா எனப்படும் விவசாயிகள் சங்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டு தங்களது பெரிய அளவிலான ஈடுபாட்டைச் சுதந்திரப் போராட்டக்களத்தில் உணர்த்தினர்.

ii) 1930களில் இந்திய தேசிய காங்கிரஸ் ஒரு பெரும் மக்கள்கட்சியாக உருவெடுத்தது.

iii) நேருவின் தலைமையின் கீழ் வந்த காங்கிரஸ் சமூக மற்றும் பொருளாதாரநீதி அடிப்படையில் ஒரு தாராளவாத சமூகத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தது.

A) i), ii), iii)

B) i), ii)

C) ii), iii)

D) i), iii)

63) மார்ச் 1931இல் நடந்த கராச்சி அமர்வு யாருடைய தலைமையில் நடைபெற்றது?

A) சுபாஷ் சந்திர போஸ்

B) நேரு

C) சர்தார் வல்லபாய் படேல்

D) அன்னிபெசன்ட்

64) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i) மார்ச் 1933 இல் நடந்த திரிபுரா அமர்வு அடிப்படை உரிமைகள் தீர்மானத்தில் முக்கிய இடம் பிடித்துள்ளன.

ii ) கொடூரமான சட்டங்கள் போட்டும், அடக்குமுறைகளைக் கையாண்டும் மக்களின் சுதந்திரத்தைக் காலனியரசு நசுக்கியது.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

65) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) சுதந்திர இந்தியாவில் இந்திய தேசிய காங்கிரஸ் தான் வழங்க உறுதியளித்துள்ள உரிமைகள் பட்டியலில் காந்தியடிகளின் கொள்கைகளும் நேருவின் சோசலிச பார்வைகளும் இடம் பெற்றன.

ii ) சாதி அமைப்பு மற்றும் தீண்டாமை நடைமுறை ஆகியவை பொது இடங்களிலும் நிறுவனங்களிலும் சமமான அணுகுமுறையை உறுதி செய்ய சவாலாய் இருந்தன.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

66 கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) அடிப்படை உரிமைகள், உண்மையில் இந்திய அரசமைப்பின் பகுதிIV ல் இடம்பெற்றுள்ளன.

ii ) அவற்றுள் சில, பகுதி III ல் நாட்டின் அரசு வழிகாட்டு நெறிமுறைகளில் இடம்பெற்றுள்ளன.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

67) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) உலகப் பெருமந்த நிலை 1929இல் இருந்து ஒரு பத்தாண்டாக நீடித்த ஒரு கடுமையான மற்றும் நீடித்தப் பொருளாதார நெருக்கடி ஆகும்.

ii ) மந்தமான பொருளாதார நடவடிக்கைகள் வேலையின்மை மற்றும் பட்டினி போன்ற நெருக்கடிகளுக்கு இட்டுச் சென்றது.

iii) தென் அமெரிக்காவில் தொடங்கிய பொருளாதாரப் பெருமந்தமானது ஐரோப்பாவையும் உலகின் அனைத்துத் தொழில்துறை மையங்களையும் பாதித்தது.

A) i ), ii ), iii)

B) i ), ii )

C) ii ), iii)

D) i ), iii)

68) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) உலகம் அதன் காலனித்துவ ஒழுங்கினால் ஒருங்கிணைக்கப்பட்டிருந்ததால், அதன் பொருளாதார மண்டலத்தில் உலகின் ஒருபகுதியில் ஏற்படும் வளர்ச்சியானது மற்ற பகுதிகளையும் பாதித்தன.

ii ) அமெரிக்காவில் வால் தெருவில் (Wall Street) உண்டான பெரும் அளவிலான பொருளாதார வீழ்ச்சி உலகையே உலுக்கியது.

iii) பிரிட்டிஷ் காலனித்துவம் இந்தியாவின் நிலைமையை மேலும் மோசமாக்கியது.

A) i ), ii ), iii)

B) i ), ii )

C) ii ), iii)

D) i ), iii)

69) பின்வருவனவற்றுள் தவறான விடையைத்தேர்ந்தெடு.

i ) பெருமந்தம் உற்பத்தித்தொழிலை மட்டும் பாதித்தது.

ii ) தொழில்துறை மையங்களான பம்பாய், கல்கத்தா, கான்பூர், ஐக்கிய மாகாணம், சென்னை ஆகிய இடங்களில் வாழ்க்கை நிலையை மேம்பாடடையச் செய்யக் கோரி தொழிலாளர் போராட்டம் வெடித்தது.

iii) வேளாண் துறையில், சணல் மற்றும் கச்சாப் பருத்தி போன்ற ஏற்றுமதி விவசாயப் பொருட்களின் விலைகள் அதிகரித்தன.

A) i ), ii ), iii)

B) i ), ii )

C) ii ), iii)

D) i ), iii)

70) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) 1929 – 1930இல் ₹.311 கோடியாயிருந்த இந்திய ஏற்றுமதியின் மதிப்பு 1932 – 1933இல் ₹.132 கோடியாகச் சரிந்தது.

ii ) 1930களில் தோன்றிய கிசான் சபாக்கள் குத்தகைக் /வாடகைக் குறைப்புகள், கடன் பிடியிலிருந்து நிவாரணம், ஜமீன்தாரி முறை அகற்றப்படுதல் ஆகியவற்றிற்காகப் போராடியது.

iii) இந்தியத் தொழில்துறைக்குக் கிடைத்த ஒரே நேர்மறைத் தாக்கம் தொழிலாளர்களுக்கு நல்ல ஊதியம் கிடைத்தது.

A) i ), ii ), iii)

B) i ), ii )

C) ii ), iii)

D) i ), iii)

71) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?

i ) பிரிட்டனுடனும் பிற முதலாளித்துவ நாடுகளுடனும் ஏற்பட்ட பலவீனமான உறவுகளால் சில இந்திய தொழில்களில் வளர்ச்சியடைந்தன.

ii ) உள்ளூர் நுகர்வுக்கு முக்கியத்துவமளித்த தொழில்கள் மட்டுமே செழித்தோங்கியன.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

72) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.
i ) பிரிட்டிஷ் வணிகக் கொள்கையானது உள்நாட்டுத் தொழில்துறையைப் பெரும் எண்ணிக்கையாக்கியது.
ii ) இந்தியாவைத் தொழில்மயமாக்குதல் பிரிட்டிஷ் கொள்கையின் ஒரு பகுதி ஆகும்.
iii ) மற்ற காலனிகளைப் போலவே இந்தியாவும் ஒரு மூலப்பொருள் கொள்முதல் செய்யும் பகுதியாகவும் உற்பத்திப்பொருட்களுக்கான சந்தையாகவும் கருதப்பட்டது.
A) i ), ii ), iii )
B) i ), ii )
C) ii ), iii )
D) i ), iii )

73) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.
i ) முதல் உலகப்போரின் போதும் பொருளாதாரப் பெரும் மந்தம் போன்ற சில எதிர்பாராத சந்தர்ப்பங்கள் காரணமாகவும் இந்தியாவில் தொழில்துறை விரிவாக்கம் ஏற்பட்டது.
ii ) 1854இல் பம்பாயில் கவஸ்ஜீ நானாபாய் தவர் (1815 – 73) என்ற பார்சி இனத்தைச் சேர்ந்த இந்தியரே பருத்தி ஆலையை முதன்முதலில் தொடங்கினார்.
iii ) இது பாம்பே ஸ்பின்னிங் அண்ட் வீவிங் கம்பெனி என்று அறியப்பட்டது.
A) i ), ii ), iii )
B) i ), ii )
C) ii ), iii )
D) i ), iii )

74) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?
i ) அமெரிக்க உள்நாட்டுப் போர் (1861 – 65) பருத்தி விவசாயம் செய்தோருக்கு ஒரு வரம்.
ii ) உள்நாட்டுப் போருக்குப்பின் பிரிட்டன் அமெரிக்காவிலிருந்து பருத்தி இறக்குமதி செய்வதை நிறுத்தியதால் இந்தியப் பருத்தி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.
A) i ) மட்டும்
B) ii ) மட்டும்
C) i ) மற்றும் ii )
D) இரண்டும் தவறு

75) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.
i ) ஐரோப்பியர்கள் பருத்தியின் மலிவான, அபரிதமான உற்பத்தியால் இந்தியாவில் ஜவுளித் தொழிற்சாலைகளைத் துவக்கினர்.
ii ) இந்தியத் தொழில் முனைவோரால் அகமதாபாத் ஜவுளி ஆலைகள் நிறுவப்பட்டதும், அகமதாபாத் மற்றும் பம்பாய் ஆகியவை பருத்தி ஆலைகளின் முக்கிய மையங்களாக மாறின.
iii ) 1914ஆம் ஆண்டு வாக்கில், பம்பாய் மாகாணத்திற்குள் 129 நூற்பு, நெசவு மற்றும் பிற பருத்தி ஆலைகள் இருந்தன.
A) i ), ii ), iii )
B) i ), ii )
C) ii ), iii )
D) i ), iii )

76) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.
i ) 1875 – 76க்கும் 1913 – 14க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் பருத்தி ஜவுளி ஆலைகள் எண்ணிக்கை 47 லிருந்து 271 ஆக அதிகரித்தது.
ii ) இந்தியாவில் தொழில்துறையை நிறுவுவதில் ஒரு முக்கியமான மைல் கல் இந்தியாவின் இருப்புப்பாதை விரிவாக்கமும் புகைவண்டிப் போக்குவரத்து அதிகரித்ததுமேயாகும்.
iii ) முதல் பயணிகள் ரயில் 1854 இல் பம்பாய்க்கும்தானேவுக்குமிடையே இயங்கியது.
A) i ), ii ), iii )
B) i ), ii )
C) ii ), iii )
D) i ), iii )

77) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.
i ) இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டில் இந்தியாவின் மிகப்பெரிய பொறியியல் தொழில் இரயில்வே ஆகும்.
ii ) பிரிட்டிஷாரால் நிர்வகித்து, ரயில்வே நிறுவனங்களால் நடத்தப்பட்ட இந்த நிறுவனத்தில் 1911இல் 98,723 நபர்கள் பணியில் இருந்தனர்.
iii ) இரயில்வே, இதரப் போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு வசதிகளின் வருகை பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு உதவியது.
A) i ), ii ), iii )
B) i ), ii )
C) ii ), iii )
D) i ), iii )

78) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.
i ) இந்தியாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி மற்றும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சணல் உற்பத்தி மற்றொரு தொழில் ஆகும்.
ii ) முதல் சணல் உற்பத்தி ஆலை பம்பாயில் 1855இல் நிறுவப்பட்டது.
iii ) 1914ஆம் ஆண்டில் கல்கத்தா மாகாணத்தில் மட்டும் 64 ஆலைகள் இருந்தன.
A) i ), ii ), iii )
B) i ), ii )
C) ii ), iii )
D) i ), iii )

79) பெங்கால் நிலக்கரி நிறுவனம் யாரால் நிறுவப்பட்டது?
A) தேவேந்திரநாத் தாகூர்
B) கவாஸ்கர்
C) டாடா

D) துவாரகநாத் தாகூர்

80) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) 1892க்குப் பிறகு நிலக்கரி உற்பத்தித் துறையின் வளர்ச்சி வேகமெடுத்து முதல் உலகப்போரின் போது உச்சத்தையெட்டியது.

ii ) இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவில் தொழில்துறை மாற்றுப்பாதையில் விரிவுபடத் தொடங்கியது.

iii ) 1908 இல் பீகாரிலுள்ள சாகி நகரில் டாடா குழுமத்தால் டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO) – முதன்முதலில் சுதேசி இயக்கத்தின் ஒரு நிகழ்வாக அமைக்கப்பட்டது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

81) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) 1875இல் ஐரோப்பியர்கள் குழு ஒன்று வங்காள இரும்பு நிறுவனத்தை நிறுவ முயற்சித்தது.

ii ) 1895 இல் வங்காள இரும்பு மற்றும் எஃகு ஆலை அமைக்கப்பட்டது.

iii ) இந்தத் துறையில் உள்ள மற்ற முயற்சியாளர்களைவிட டாடா மிக உன்னத நிலையை அடைந்துள்ளது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

82) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) முதல் உலகப் போர் நாட்டைத் தொழில் மயமாக்குவதற்கு ஒரு இடைக்காலத் தடையாய் இருந்தது.

ii ) பிரிட்டனின் கிழக்கு நோக்கிய திட்டமிடலுக்கு ஜப்பான் சவாலாய் இருந்தது.

iii ) பிரிட்டன் தனதுக் கட்டுப்பாட்டிலிருந்த இந்திய முதலீட்டாளர்களுக்கு சில சலுகைகள் வழங்கியது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

83) தொழிற்துறை ஆணையம் எந்த ஆண்டு நியமிக்கப்பட்டது?

A) 1918

B) 1919

C) 1917

D) 1916

84) முதல் காகித ஆலை இந்திய முதலாளிகளால் எங்கு அமைக்கப்பட்டது?

A) போபால்

B) லக்னோ

C) பூனா

D) கல்கத்தா

85) 1904இல் தென்னிந்திய தொழிற்சாலை நிறுவனம் சிமெண்ட் உற்பத்தியை எங்குதொடங்கியது ?

A) பெங்களூர்

B) ஹைதராபாத்

C) மதராஸ்

D) கொச்சின்

86) இந்தியருக்குச் சொந்தமான முதல் தேசிய தோல் பதனிடும் தொழிற்சாலை எங்கு தொடங்கப்பட்டது?

A) டெல்லி

B) கல்கத்தா

C) சென்னை

D) பம்பாய்

87) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மைசூர் கோலார் தங்கச் சுரங்கத்தில் தங்கம் வெட்டியெடுக்கும் பணி தொடங்கப்பட்டது.

ii ) போர்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதி உற்பத்தித் தொழில்களின் வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.

iii ) ஆச்சரியத்தக்கவகையில் பிரிட்டன் மற்றும் உலக சராசரியை விடவும் இந்தியத் தொழில்களின் வளர்ச்சி சிறப்பாக இருந்தது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

88) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) 1923 – 24இல் ஒரு சிறிய தடுமாற்றத்திற்கு பிறகு, நெசவுத் தொழில் சிறப்பாக செயல்படத் தொடங்கியது.

ii ) போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில், தறிகள் மற்றும் சுழல் அச்சுக்கள் எண்ணிக்கையில் கணிசமாய் உயர்ந்தன.

iii ) 1929 – 30களில் இந்தியாவால் 44 சதவீதம் வெளியில் இருந்து நுகர்வு செய்யப்பட்ட பருத்திப் பொருட்கள் 1933 – 34இல் பெருமந்தநிலைக்குப் பின்னர், 20.5 சதவிகிதமாகக் குறைந்துவிட்டது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

89) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) சில்வியா நீராவிக் கப்பல் கம்பெனி லிமிடெட் (1919) ஏனையவற்றிற்கு முன்னோடியாக இருந்தது.

ii ) கப்பல் துறையில் எட்டு இந்திய நிறுவனங்கள் செயல்பட்டு வந்தன.

iii ) உலகப் போருடன் ஒரு புதிய கட்ட உற்பத்தி துவங்கி, அது இயந்திர உற்பத்தி, விமானப் போக்குவரத்து,

winmeen.com

ரயில்பெட்டி, ரயில் எஞ்சின் உற்பத்தி மற்றும் பலவற்றிற்கான உற்பத்தித் தொழில்களாய் விரிவடைந்தது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

90) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) கோயம்புத்தூரில், 1896இல் ஸ்டேன்ஸ் மில் (கோயம்புத்தூர் நூற்பு மற்றும் நெசவு ஆலை) நிறுவப்பட்ட பின் வேறு எந்த ஆலைகளும் வரவில்லை.

ii ) பொருளாதாரப் பெருமந்தத்தால் ஏற்பட்ட நிலத்தின் விலை வீழ்ச்சி, குறைந்த ஊதியத்தில் தொழிலாளர்கள், குறைந்த வட்டி விகிதத்தில் கடன் போன்றவை கோயம்புத்தூரில் ஜவுளித்துறையின் விரிவாக்கத்திற்கு வழிவகுத்தன.

A) i ) மட்டும்

B) ii ) மட்டும்

C) i ) மற்றும் ii )

D) இரண்டும் தவறு

91) பின்வருவனவற்றுள் சரியான விடையைத்தேர்ந்தெடு.

i ) 1929 – 37களில் கோயம்புத்தூரில் இருபத்து ஒன்பது ஆலைகள் மற்றும் விதை நீக்கும் தொழிற்சாலைகள் தோன்றின.

ii ) 1932இல் மதுரை மாவட்டத்தில் மதுக்கரை என்ற இடத்தில் சிமெண்ட் தொழிற்சாலை தொடங்கப்பட்டது.

iii ) 1931 – 1936க்கு இடையில் மாகாணத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை இரண்டிலிருந்து பதினொன்றாய் உயர்ந்தது.

A) i ), ii ), iii )

B) i ), ii )

C) ii ), iii )

D) i ), iii )

winmeen.com